**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 261/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | ஜெயபால், வயது 35 |
| Father Name/Husband Name | : | முத்துப்பாண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மளிகை கடையில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of October 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டி சண்முகா நகரில் வசித்து மளிகை கடையில் வேலை செய்கிறேன். எதிரியை தெரியாது. கடந்த 04.04.2022 ஆம்தேதி எனக்கு சொந்தமான TN 69 AX 4268 என்ற எனது இருச்சக்கர வாகனத்தை வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்தேன். அதனை காணவில்லை
2. அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தேன் கிடைக்கவில்லை. பின்னர் மறுநாள் கிழக்கு காவல்நிலையம் சென்று புகார்மனு அளிதேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**
3. பின்னர் அன்று மதியம் 01.30 மணியளவில் எனக்கு காவல்நிலையத்தில் இருந்துபோன் செய்து வண்டி இருப்பதாகவும் அதனை அடையாளம் காட்ட வேண்டியும் கேட்டார்கள் நான் சென்று பார்த்து எனது வண்டியை அடையாளம் காட்டினேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எத்தனை மணிக்கு வேலைக்கு சென்று வருவீர்கள் என்றால் காலை 09.00 மணிக்கு சென்று இரவு 10.00–10.30 மணிக்கு வருவேன். வண்டியை உங்கள் வீட்டிற்குள் நிறுத்தியிருந்தீர்களா என்றால் இல்லை வெளியில் நிறுத்தியிருந்தேன்.
2. வண்டி காணாமல் போன அன்று போலிசார் வந்து விசாரித்தார்களா

என்றால் நான் மறுநாள் சொன்ன பிறகு தான் வந்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து காவல்நிலையம் சென்றீர்கள் என்றால் ஒரு நாள் கழித்து சென்றேன்.

3. காவல்நிலையத்தில் நீங்கள் சொன்னதை போலிசார் எழுதி உங்களிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை நான் எழுதி கொடுத்தேன். உங்கள் உடன் யார் யார் வந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் போனேன்.
4. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.